செய்தி வெளியீடு எண்.670 நாள்.1.10.2009

## நியாய விலைக் கடை சரக்கிருப்பினை S.M.S. மூலம் பொது மக்கள் அறியும் வசதி அறிமுகம்

தமிழகத்திலுள்ள 28,000 நியாய விலைக் கடைகளில் சரக்கிருப்பு விவரம் தினசரி S.M.S. மூலம் சேகரிக்கப்படுகிறது. இதுவரை இந்த வசதி அரசின் பொது விநியோகத் திட்டத்தின் நிர்வாகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் நியாய விலைக் கடையில் உள்ள பொது விநியோக பொருட்களின் அன்றைய இருப்பு விவரத்தை S.M.S. தகவல் அனுப்பி பெறும் வசதியை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

### எவ்வாறு தகவலைப் பெறலாம்

குடும்ப அட்டைதாரர்கள் (PDS) இடைவெளி (மாவட்ட குறியீடு) இடைவெளி (கடை எண்) என்ற முறையில் S.M.S. அனுப்ப வேண்டும். உதாரணமாக "PDS 01 BE014" என்ற தகவலை 9789006492, 9789005450, 9176480226, 9176480227, 9094831766, 9790725349, 9176480216 ஆகிய ஏதேனும் ஒரு தொலைபேசிக்கு அனுப்பினால் உடன் நியாய விலைக் கடையில் பொருள் வாரியான அன்றைய சரக்கிருப்பு விவரங்களைப் பெறலாம்.

மேலே கண்ட S.M.S. தகவலில் உள்ள 01 என்ற குறியீடு சென்னை (வடக்கு) மாவட்டத்திற்கு உரியது. எனவே, இந்த குறியீட்டினை தங்களது மாவட்டக் குறியீட்டினைக் கொண்டு மாற்றிட வேண்டும். அதுபோல் BE014 என்ற கடை குறியீடு (shop code) தங்களது குடும்ப அட்டையிலுள்ள முன்பக்க கீழ்ப்பகுதியில் அச்சடிக்கப்பட்டுள்ளவாறு S.M.S. பதிவு செய்ய வேண்டும்.

குடும்ப அட்டை எண்ணில் முதல் இரண்டு எழுத்துக்கள் மாவட்ட குறியீட்டு எண்ணாகும். உதாரணமாக, 01/G/0557070 என்று குடும் அட்டை எண்ணில் "01" என்பது சென்னை (வடக்கு) மாவட்ட குறியீடாகும். இதுபோல் ஒவ்வொரு மாவட்ட குறியீடு குடும்ப அட்டை எண்ணில் உள்ளது. எனவே, அந்த குறியீட்டு எண்ணை சரியாக அளித்து நியாய விலைக் கடையின் இருப்பு விவரத்தைப் பெறலாம்.

S.M.S. அனுப்பும் கணினியில் (server) மாலை 5 மணிக்கு மேல் அதிக பளு ஏற்படுவதால் மேற்கண்ட தகவல் பெறும் சேவையை காலை நேரங்களில் உடனடியாக பதில் தகவல் பெறும் வண்ணம் பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இது சம்பந்தப்பட்ட கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் jrpds1chennai@yahoo.co.in மின் அஞ்சலுக்கு தகவல் தெரிவிக்கலாம்.

ஒம்/–
**(க. சண்முகம்)**
**அரசு முதன்மை செயலாளர்**
**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்**
**பாதுகாப்புத் துறை, சென்னை–9.**

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9